இணைப்பு-I.

(22 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க).

திருநெல்வேலி மாவட்டத்தில், பாவூர் சத்திரம் காவல் நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் மேலப்பாவூர் என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் சுமார் 2,500 ஆதி திராவிடர் வகுப்பினரும், 2,700 ஆதி திராவிடர் அல்லாதவர்களும் வசித்து வருகின்றனர். நடந்து முடிந்த பஞ்சாயத்து தேர்தலில், மேலப்பாவூர் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு திரு. பண்டாரம் என்ற ஆதி திராவிட இனத்தவரும், திரு. செல்லச்சாமி தேவர் என்பவரும் போட்டியிட்டனர். இத்தேர்தலில், திரு. செல்லச்சாமி தேவர் வெற்றி பெற்றார். தனிப்பட்ட முறையில் பெருவாரியான எண்ணிக்கையுள்ள ஆதி—திராவிடர்கள் தேர்தலின்போது மற்ற இனத்தவர்கள் தங்களுக்கு வாக்களிக்காது தேவர் இனத்தவருக்கு வாக்களித்துள்ளனர் என்று கருதி பகை உணர்ச்சி கொண்டனர் என்று சொல்லப்படுகிறது. இதன் விளைவாக 25—2—1986 அன்று இரவு ஆதி திராவிடர்கள் மற்ற இனத்தவர்களின் வீடுகள் மீது கற்களை வீசினர். தகவலறிந்த காவல் துறையினர் அவ்விடத்திற்குச் சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினர். இது தொடர்பாக பாவூர் சத்திரம் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து 26—2—1986 அன்று காலை தேவர் பிரிவைச் சேர்ந்த சிலர் மேலக்காலனியில் உள்ள ஆதி திராவிடர்கள் வீடுகளின்மீது கற்களை வீசினர். இது சம்பந்தமாக பாவூர் சத்திரம் காவல் நிலையத்தில் கு. எண். 37/86-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு தேவர் இனத்தைச் சேர்ந்த 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

2. இரு பிரிவினர் மீதும் பாவூர் சத்திரம் காவல் நிலைய குற்ற எண்கள். 40/86 மற்றும் 41/86-ல் இ. பி. கோ. 107-வது பிரிவின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவரின் விசாரணையில் உள்ளன.

3. நடைபெற்ற சம்பவங்களின் சம்பந்தமாக, மேலப்பாவூர் கிராமத்தில் 26—2—1986 அன்று தென்காசி வட்டாட்சியர் அமைதிக் குழு கூட்டம் ஒன்று நடத்தினார். இக்கூட்டத்தில் தேர்தலில் வெற்றி பெற்ற திரு. செல்லச்சாமி தேவர், தோல்வியடைந்த திரு. பண்டாரம் மற்றும் ஒவ்வொரு சாதியிலிருந்தும் ஒரு பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டு இனிமேல் மேலப்பாவூர் கிராமத்தில் அமைதி காப்பதாக வாக்களித்தனர்.

TRUTH ALONE TRIUMPHS

4. மேலப்பாவூர் கிராமத்தில் காவல் பாதுகாப்பு அளிக்கப்பட்டு நிலைமை கண்காணிக்கப்பட்டு வந்தது. மீண்டும் 21—3—1986 அன்று காலை கிராமத்தில் ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரின் வீடுகளின்மீது கல்லெறிந்து சேதம் விளைவித்ததாகத் தெரிகிறது. தென்காசி துணை காவல் கண்காணிப்பாளர் அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினார். இது சம்பந்தமாக பாவூர் சத்திர காவல் நிலைய கு. எண். 56/86-ல், இ. பி. கோ. 294-வது பிரிவின் கீழ் இரண்டு நபர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

5. எனவே மீண்டும் பிரச்சினை தலைதூக்குவதையொட்டி, 22—3—86 அன்று திருநெல்வேலி கோட்டாட்சியாளர் மேலப்பாவூர் கிராமத்தில் இரண்டாவது முறையாக அமைதிக் குழு கூட்டம் நடத்தினார். அக்கூட்டத்தில் இருபிரிவினர்களும் இனி தாங்கள் வன்முறைச் செயலில் ஈடுபடுவதில்லையென்றும் அமைதி காப்பதாக உறுதி அளித்தனர். ஆனால் அடுத்த நாளே, அதாவது 23—3—1986 அன்றே காலை மீண்டும் சுமார் 200 நபர்கள் சட்ட விரோதமாகக் கூடி கம்பு, அரிவாள் முதலியவைகளைக் கொண்டு சில இனத்தவர்களின் வீடுகளையும் கடைகளையும் தாக்கி சுமார் ரூ. 10,000 மதிப்புள்ள பொருட்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தினர். நாட்டு வெடிகுண்டும் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. காவல் துறையினர் அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினர். இது சம்பந்தமாக பாவூர் சத்திரம் காவல் நிலையத்தில் கு. எண். 57/86-ல், இ.த.ச. 127, 128, 307, 395, 398—ன்படியும் மற்றும் இந்திய வெடி மருந்துச் சட்ட பிரிவு 9(111) (பி)-யின்படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படும் கலைமோகன் மற்றும் 18 பேர்களின்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு சாரார்மீது கல்லெறிந்ததாக மறு பக்கத்தைச் சேர்ந்த பொன்னுசாமி மற்றும் 9 பேர்கள்மீது பாவூர் சத்திர காவல் நிலைய கு. எண். 58/86-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு காவலுக்கு அனுப்பப்பட்டனர். நாட்டு வெடிகுண்டு வீசியதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

6. நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. கோட்டாட்சித் தலைவர் அமைதிக் குழுவின் மூலம் அமைதி பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார். இரு சாரார் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.